

கலைஞனும் இரசிகனும்


Pax Ravichandra

pax.ravichandra@gmail.com

06-05-2024

ஆலயம்


உள்ளம் பெருங்கோயில்-ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பெருமானுக்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தாருக்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனனைத்தும் காளாமணி விளக்கே



எளிய மனங்களில் வாழும் இறைவன்-ஆலயம்,
கோயில்களில் வாழ்வதில்லை-நொருங்கிய
மனங்களை வேண்டும் இறைவன்-கள்வர்
குகையான ஆலயங்களில் குடிகொள்வதில்லை

கள்வர் குகையான ஆலயங்கள்
கல்லின் மேல் கல் இராதபடி இடிக்கப்படும்
ஆன்மீகவாதியின் கர்ஜனை, மதங்களிலோ
பசுத்தோல் போர்த்திய ஓநாய்களுக்கு ஆராதனை

இரவல் நம்பிக்கையைப் பின்பற்றும் விசுவாசிகளோ
சிந்திக்க உரிமையோ ஆற்றலுமில்லா மந்தைகள், ஆயன்
வழிச் செல்லும் மந்தைகளுக்கு தனிப் பாதைகளில்லை, அரியாய்
கர்ச்சிக்கும் ஆன்மீகமோ தனிமனித தேடலின் உயர் நிலை



ஆலயம், கோயில், மசூதிகளை இடியுங்கள்
தூய உள்ளமே இறை வாழும் இல்லம்
உண்மையே தெய்வம், ஓதிடும் வேதங்களோ
பிரிவினையின் சின்னம்

மதம் சார்ந்த மக்களோ புத்தியிழந்து மந்தைகளான அவலம்,
புராணக் கற்பனைகளை வேதம் எனத் தொழும் மதியீனம்,
புதுமைகளைத் தேடும் உலகில் “அன்பே” பெரும் புதுமை
“உண்மையே” தெய்வம் என அறியாத சிறுமை

மக்கள் சிந்தையை சிதறடித்து, மந்தைகளாக்கி ஆளும் மதவாதம்,
உண்மையே தெய்வம் ஆன்மீகவாதியின் ஓங்கார நாதம், மூட நம்பிக்கையும்
குருட்டுப் பக்தியும், சடங்குமாய் மதம், குருடருக்கு குருடர் வழிகாட்ட
குழியில் விழுவதை அறியாத மந்தைகளோ பலவிதம்

சிந்தித்த பக்திமான்களை சிறையிலிட்டும், சிலுவையில் அறைந்தும்,
எரித்தும் கொன்ற மதவாதம், நானும், தந்தையும் ஒன்றே, வழியும்,
உண்மையும், வாழ்வும் “நானே”. விழித்த மனதின் ஆனந்தக் கர்ச்சனை
“அனல் ஹக்” ஹீசைன் பின் மன்சூரின் ஆனந்த ஆலாபனை

உள்ளுணர்வின் உச்சத்தில் ஆன்மீகவாதியின் கர்ச்சனையோ
சத்திய தரிசனத்திற்கு ஆனந்த அர்ச்சனை, பக்தி வந்தால் புத்தி
பறிபோகும் உண்மை, பகுத்தறிவோ மதம் வேண்டும் தட்சிணை
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம் நிதரிசனம்

உள்மூச்சில் பிறந்து, வெளி மூச்சில் மடியும் வாழ்வு
கணந்தோறும் ஜனனம், கணந்தோறும் மரணம் அறிந்தால்
நம்மை அறியும் நம் அகமுகத் தீர்த்த யாத்திரை-நம்மை
நாம் அறியும் மெய்யறிவால் கிழியும் “அஞ்ஞானத் திரை”

ஆணவம் கழிந்தால் உள்ளுணர்வில்-நாமும்
அதுவே, அஹம் பிரம்ம அஸ்மி, தத்துவ மஸி,
நானும் தந்தையும் ஒன்றே, அனல் ஹக்
இருப்போடு ஒன்றாகும் ஆனந்தப் பெருநிலை

உண்மையின் பெயர் தெய்வம் என்போம்-அன்றி
ஓதிடும் தெய்வங்கள் பொய்யென் கண்டோம்
உண்மைகள் வேதங்கள் என்போம்-பிறிது
உள்ள மறைகள் கதையென் கண்டோம்-*பாரதி*

Hussain bin Mansoor [sic] Al-Hallaj was condemned to hang by the neck for shouting in ecstasy Anā al-Ḥaqq, Anā al-Ḥaqq (I am the Truth, I am the Truth). The orthodox understood this to mean that he was claiming to be God himself, whereas he had proclaimed, in his sublime spiritual ecstasy, simply a total annihilation of himself. Mansoor Al-Hallaj climbed the gallows with his head held high, not the least daunted by his imminent death. Nor could his shouts be drowned in the tumult of abuses which were hurled at him; they rose loud and clear and high Anā al-Ḥaqq, Anā al-Ḥaqq until his soul departed to the fountainhead[citation needed] of his life on high.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-4-5-2024

அன்னையின் மகள்

உக்கிரமான உள்நாட்டுப்போர்-கிழக்குப் பாகிஸ்தானை
உலுக்கி, எரிக்கும் நேரம், ஆயிரமாயிரம் மங்கையர், இராணுவத்தின்
பாலியல் வல்லுறவுக்காளாகி, கொல்கொத்தாவை நோக்கி
அகதிகளாய் தஞ்சம் கோரிடும் இருண்ட காலம்



அழுத விழிகளும், கலைந்த கூந்தலும், அழுக்குச்
சேலையும், அழகை மறைக்கப் பசி, தாகம், பாலியல்
வல்லுறவால் நொருங்கிய நெஞ்சம், தஞ்சம் கோரி
கதவைத் தட்ட, மெல்லத் திறந்த கதவு



வாருங்கள் உள்ளே அழைத்த கட்டழகன்
நீராட மாற்றுடை கொடுத்து, காயங்களுக்கு மருந்திட்டு,
உணவும், நீரும் புகலிடமும் அளித்தே
பரிவோடு கதை பேட்டு பாசமாய் அணைத்த மனிதன்

விடியலில் அழகு பூத்த மலர் கண்களைக் கொள்ளை
கொள்ள, கனிவோடு இரங்கிய மனம், கலங்கவேண்டாம்
காலமெல்லாம் இங்கிருக்கலாம் காதலாகிச் சொல்ல
நம்பிய பேதை, காலங்களில் அவன் வசந்தம் பாடிய சீதை

கைத்தலம் பற்றாமல், மாங்கலயம் அணியாமல்
கட்டில் சுகம் ஈந்த கோதை, கருத்தரிக்க, ஓர் இரவில்
காரில் ஏற்றி ஊரைச் சுற்றிக் காட்டி, உல்லாசமாயக் கதைபேசி
கைவிட்டு, கள்ளமாய்க் கண் மறைந்த காமக் கள்வன்

அன்று அகதியாய் வாழ்வு, இன்று நடுத்தெருவிலே
கர்ப்பிணியாய்ப் பரிதவிப்பு, அன்னை தெரேசாவின் கன்னியர்,
கர்ப்பிணிக்கு காப்பகத்தில் இடங்கொடுத்து உதவ
காலத்தே பெண் மகவை ஈன்று பேதலித்த அம்மை



மகவோடு தொடங்கிய வாழ்வோ போராட்டம்
ஆண்டு பதினெட்டு உருண்டோட, அன்னை மாண்டிட
அழகு பூத்தாடும் நந்தவனம், காண்பவர் நெஞ்சில்
காமன் இசை மீட்க, ரதியின் மன்மத அபிநயம்

படித்துப் பட்டம் பெற்று திசை மாறிய கன்னியின் வாழ்வு
பத்திரிகையில், வல்லாங்குக் ஆளான பெண்மைக்கு
குரல் கொடுத்து, எழுத்தாளும், பேச்சாலும் ஆண் மகனாய்
உலாவரும் எழுத்தாளர் பத்மபூஷண விருதுக்குத் தெரிவு சேதி

அழைப்பு மணி அந்தியில் அலங்காரமாய் ஒலிக்க
கதவைத் திறந்த எழுத்தாளர் கண்களுக்கு அழகின் விருந்து,
புன்னகையோடு பத்திரிகை நிருபர்-தங்களைப் பேட்டி காண
டெல்லியில் இருந்து வந்துள்ளேன் மொழிகளிலே அமுது

அஞ்சுகத்தின் மொழியிலே கொஞ்சும் ஆங்கிலம்
நெஞ்சைத் தொட, பிஞ்சு முகத்தின் கொள்ளை அழகு
காமனுக்கு அழைப்பு விட, கவர்ச்சியான உடையில்
காரிகை, பேச்சிலே பெண்ணியத்தின் உரிமை

கறைபட்டு, நெஞ்சில் காயம் பட்ட பெண்களை
காக்கும் கடவுளாய் நீங்கள், அறிந்து இன்புற்றேன்,
மணம் முடிக்காமல் வாழ்வை, பெண்ணிய உரிமைக்காய்
தவமாக்கும் உங்களைக் கண்டு களிப்புற்றேன்

நெருங்கி உறவாட, நேசமாய் கரங்கள் தொட்டு
பரவசம் கூற, தொலைவிலிருந்து வந்துள்ளீர்கள்
இன்று என் விருந்து, இரவு தங்கி நாளை பேட்டி
கண்டு செல்லுங்கள், நேரமாகிவிட்டது



அன்போடு அழைப்பை ஏற்ற மங்கை, நீராடி
ஒன்றாய் கதைபேசி, உண்டு குடித்து உறங்கச்
செல்லப், பஞ்சணைக்கு பருவமே விருந்து-என்
நெஞ்சற்ற காமநோய்க்கு கன்னியே அருமருந்து

காதல் காமம் அழைக்க, கன்னியின் கதவும் திறக்க
கட்டியணைத்தவனை, மெல்ல அணைத்தவள்
காதல் மொழிந்தாள், கலிங்கம் களைந்து, காமன்
விருந்து கொண்டாட, விரக தாபம் தீராது என்றாள்

நுதல் தொட்டு, நூலிடை அணைத்து, இதழ் கவ்வி,
இசை பிறக்க, காதல் மொழியாத கலைஞன்
வெறும் காமசுகம் காணும் தெருநாயாய் தன்னை
உழுது விதைத்துக் களைத்த காமுகனோ கயவன்

மோட்டை வெறித்த விழிகளில் விரக்தி, கடைக் கண்களில்
கசியும் கண்ணீரில் தீக்குளிக்கும் உறுதி, இவளும் ஒருவிதத்தில்
காமுகனை அழிக்கும் பெண்மையில் பராசக்தி

விடியலில் நீராடிய மங்கை, விழி நீரை, நீரோடு கலக்கவிட்ட பெண்மை,
விருந்தாய்க் காலை உணவருந்தும்போது கதை சொன்ன மங்கை, நானோ
பல காலங்களுக்கு முன் -உன் கதவைத் தட்டிய அபலையின் குழந்தை

என் அன்னையை ஏமாற்றி, காமம் அனுபவித்து கர்ப்பிணியை
ஊர் எல்லையில் கைவிட்டாய், கன்னியரை, அபலைகளை
கட்டில் சுகம் அனுபவித்து ஏமாற்றி, ஊரும், உலகுமறிய
பெண்ணியப் போராளியாய் உன்னைக் காட்டிக் கொண்டாய்

உன் மகளோடு உடலுறவு கொண்ட உனக்கோ
இன்னும் சில வாரங்களில் பத்மபூஷண விருது?-மகளோடு
உடலுறவு கொண்ட தந்தையின் கதையோ அருவெறுப்பு, ஊரும்,
உலகுமறிந்தால் உன் முகத்தில் காறித் துப்பும் மாறாத நிகழ்வு



உன் நெஞ்சே காலமெல்லாம் உன்னைச் சுட-உனக்குத்
தரும் தண்டனை இதை விடக் கொடிது ஏதுமில்லை-நன்கு
அறிந்தே உன் பலவீனத்தை பயன்படுத்திக் கொண்டேன்-உன்
மனச்சான்றே உன்னைக் கொல்ல, பழி தீர்த்துக் கொண்டேன்

கயவன் உன் முகமூடி கிழிய, உன் குணம் அறிந்தே
காலம் பல பொறுத்திருந்தேன், நாளும் ஆறாய்ப் பெருகும்
அன்னையின் கண்ணீர் மரணத்தில் காய்ந்திட, மனதிலே
வைராக்கியம், உன்னைப் பழிவாங்கும் ஆவேசம்

தாயும், மகளும் உற்ற துயர் யாரறிவார்?
கைக்குழந்தையோடு நாதியற்று நடுத்தெருவில் அன்னை
இரக்க சிந்தையோடு அழைக்கும் கயவர் விழிகளிலோ
எரிக்கும் காமத் தீ, எம் வாழ்வோ நரகத் தீ

மடியும் தருவாயில் உன்னை இனங்கண்ட அன்னை
என்னிடம் உரைத்த கதை, நீயே என் தந்தை என்ற நிந்தை,
விந்தை விதைக்கும் காமுகன் உனக்கு, விருதும்,
பெண் விடுதலைப் போராளிப்பட்டமும் விந்தை, பெரு நிந்தை


இனி வரும் நாளெல்லாம் நரகு உனக்கு,
தன் மகளோடு உடலுறவு கொண்ட தந்தை நான்
என்ற மாறாத சிறுமை உனக்கு, உன் கண்ணிலிருந்து
மறைகிறேன், மடிய மாட்டேன் வாழ்வேன்

பத்மபூஷண விருதை ஏற்க எந்தத் தகுதியுமில்லை எனக்கு
பத்திரிகையில் கொட்டை எழுத்துக்களில் செய்தி, படித்தவர்களுக்கு
வியப்பு, படுத்து அழிந்த அபலைகள் நெஞ்சிலே பழிதீர்த்த உணர்வு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-29-03-2024

ஆன்மீகமும், மதங்களும்







மனிதத்தைப் பிரித்தாளும் மதங்களில் கடவுள், வேதம்,
கோயில், அர்ச்சகர், பலி, பூசை, சடங்கு, சம்பிரதாயங்கள்,
எங்கள் மதம், உங்கள் மதம் என்னும் மதவாதங்கள்
தந்தையும் மகனும் உறவாட இடைத் தரகர்கள்?

கடவுள் என்பதோ இரவல் நம்பிக்கை, காணாத கடவுளுக்கு
நாம, ரூபங்கள், நாமாவாளிகள், காணும் மனிதனை, நிற,
சாதியத்தால் சபித்த சோதனைகள், பிரபஞ்சமே இறையிருப்பு
அன்பே நல்நாதம், ஆன்மீகத்தின் கீர்த்தனைகள்

கல்லும், சிலையும், சித்திரங்களும் தெய்வங்கள்
காசி, இராமேஸ்வரம், க∴பா, லூர்ட்ஸ் திருத்தலங்கள்
குரு, மௌலவி, சங்கராச்சாரி, பாப்பரசர், அயத்துல்லா
அமர்ந்திட, அன்னாஸ், கைபாஸின் அரியணைகள்




இரவல் நம்பிக்கையில் ஆரவாரங்கள்
புராணப் பொய்களில் வேதங்கள்-உண்மைக்குத்
தடைபோடும் நம்பிக்கை, கால்களிலிருந்தும்
நம்பிக்கை ஊன்றுகோலில் நடக்கும் ஊனங்கள்



பக்தி வந்தால் புத்தி பறிபோகும் நிதர்சனம்
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்
எளிய மனத்தவருக்கே இறையரசு
என்றும் மாறாத சத்தியம்


ஆன்மீகம் தனி மனித அகக்கிளர்ச்சி
தன்னுள் நுழைந்து, தன்னை அறியும் அகமுக
தீர்த்த யாத்திரை, கட உள்ளே
கடவுள் நீ என்பதே மெய்யான தரிசனம்




மதச்சிறை தாண்டிய சுதந்திரம் ஆன்மீகம்
நம்பிக்கை கடந்து வாழ்ந்தறியும் சத்தியம் இறைவன்
இருமை கடந்த, மதம் துறந்த, ஆணவமழிந்த
அன்பு நிலை ஆன்மீகம்



மதம் என்னும் தொட்டிக்குள் நீந்தும் பொன் மீன்கள்
நீறு, நாமம், குல்லா, சிலுவை அலங்காரங்கள் ,
கிணற்றுத் தவளைகளுக்கு சத்தியம் கிணற்றளவே
தூய மனத்தவருக்கு சத்திய தரிசனம் வானளவே





மோட்சம், நரகம், வெகுமதி, தண்டனை
பாவம், புண்ணியம் மதவாதக் கோட்பாடு
நீயே உன் மீட்பன், உனக்கு நீயே ஒளியாகிப் போ,
ஆன்மீகவாதிகளின் வாழ்ந்தறிந்த நிலைப்பாடு

மதங்கள் தம்முள் பிரிந்து போராட, குருதி நீராட,
இராமர் கோயிலும், பாபர் மசூதியும், அல் அ∴க்ஸாவும்,
அழுகைச்சுவரிலும் குருதிக் கறைகள், இயேசுவோ
இன்றும் சிலுவையில், மதவாதமோ அரியணையில்

ஆலயங்களின் அத்திவாரங்களில் இடிபட்ட வேறோர்
மதச் சின்னங்கள், நல்மனங்களில் வாழும்
தெய்வம் மதக்கோயில்களில் வாழ்வதில்லை
உள்ளம் பெருங்கோயில் மதவாதம் அறியாத நிலை

வெளியே செல்லும் வெற்றுத் தீர்த்த யாத்திரைகள்
கங்கையாலும், கழுவமுடியாத பாவக் கறைகள்
காசியும், க∴பாவும் நம்முள்ளே, ஆணவம் , இருமை
கடந்த அகமுகப் பயணமே மெய்யான தீர்த்த யாத்திரை


மதமாற்றமல்ல மதம் கடந்த மனமாற்றமே
இறை வேண்டும் காணிக்கை, கிறிஸ்தவத்தில்
கிறிஸ்து இல்லை, பௌத்தத்தில் பெருமான் புத்தர்
இல்லை, மதவாத மனங்களில் அமைதி இல்லை

மனிதத்தைப் பிரிக்கும் மதவாதக் கோயில்,
மசூதி, ஆலயம், விகாரைகளை இடியுங்கள்
அன்பு வாழும் உள்ளமே இறையில்லம்
உள்ளுணர்வின் உயர் நிலையே தெய்வீகம்


உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை-பூவுலகில்
நல் மனத்தவருக்கு அமைதி-உன்னதமும்,
நல் மனமும் ஒன்றே, அது நம்முள்ளே


உள்ளுணர்வில் மலர்வதே வாழ்வு, புத்த, கிறிஸ்து
நிலைகள் நம்முள்ளே, இறைவன் நம் தந்தை,
நாம் இறைமக்களே, இயேசு பெருமானின் போதனை
நம்மை அறிந்தால் நாம் தெய்வங்களே,


இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-04-2024











காதல் ஓர் அமர காவியம்



உன்னோடு வாழ்வதே என்தன் சொர்க்கம்
நீயில்லாத உலகோ என்தன் நரகம்
கண்டு கயல்விழிகள் காதல் நீராட-இதழ் "கள்"
உண்டு இதயங்கள் கூத்தாட, பூத்த காதல் சங்கமம்.

கண்ணுக்கு வண்ண நிலவாகி- நெஞ்சுக்கு
வாச மலராகிப், பண்ணுக்குத் தேவராகமாகி,
இதயத்தில் படர்ந்த உயர் சாதி முல்லை
காதலுக்கு ஏது எல்லை



நினைவில் உலவும் வண்ண நிலவும்,
கனவில் பூக்கும் வண்ணக் கனவும் நான்
பாடும் நீலாம்பரியும் நீதானடி, இதயம் எழுதிய
காதல் உறவு, இரு மனங்கலந்த தேன் நிலவு

கண்டு மகிழ்ந்த விழிகளில் களிப்பு
உண்டு சுவைத்த இதழ்களில் நாணச் சிவப்பு
பேசிய மொழிகளில் காதலின் இனிப்பு
நாம் இருவரல்ல ஒருவர் என்ற பூரிப்பு

கார் கண்டட தோகை எனக் காளை மனம்
நீர் கண்ட பயிரென கன்னி மனம்
மண்ணும், மழையுமாய் இருமனம் கலந்திட
காதல் கீதம் பாடிப் பறந்த வானம் பாடிகள்

கொஞ்சும் கிளிகள் உறவாட-கொவ்வைச்
செவ்வாயால் அமுது பரிமாற-கொடியென
சுற்றிப் படர்ந்த முல்லை-கோடி இன்பம்
சுவைக்க காதலாகி பூத்து மணந்த பெண்மை

பலமணியும் ஒரு நொடியெனக் கழிய
நிலவே மறையாதே, பொழுதே புலராதே
வேண்டும் மனம், விடியும்வரை மடிமீது
தலைவைத்து உறங்க நாளும் காதலர் தினம்

கண்களால் நெஞ்சைக் கொத்தி காதல் சொன்ன
மனங்கொத்தி, சாதியக் கூண்டை உடைத்து, துணையோடு
நீல வானில் இதயராகம் பாடிய தேன் சிட்டு,
சாதியத் தீ அணைக்கத் தன்னை மாய்த்த பெண் சிட்டு

சாதியச் சகதி படியாத செந்தாமரை-தன்னைச்
சூடிக்கொடுத்த ஆண்டாளாய் பெண்ணிலை
இரு மனங்கலந்திட நடந்த இரகசியத் திருமணம்
சூடிய மாலையில் மல்லிகையின் வாச மணம்

முதலிரவு காணமுன் நெஞ்சிலே கொதிக்கும் தீப்பிழம்பு,
தேன் நிலவு காணுமுன் தேய் பிறையான வண்ண நிலவு,
ஆணவக் கொலைக்குப் பலியான கணவனோ பலியாடு
சமூகத்தில் சாதியமே மாறாத நீதி என்ற நிலைப்பாடு

கணவணை பிணமாய்க் கண்ட நங்கை-
பிரிவைத் தாங்காது நஞ்சருந்திய மங்கை
வைத்தியம் கைவிரித்திட, உறவுகள் கண்ணீரில் மூழ்கிட
கணவனோடு ஒன்றான காதல் முல்லை

வேதியப் பொய்களை நம்பி, சாதியச் சகதியை
சந்தணமாய்ப் பூசி நாறும் சமூகம், சாதியம் கடந்து
மங்கலமாய்ப் பூத்த காதலை, நேதி நேதி என்று அமங்கலமாய்
வெட்டிச் சாய்த்திட ஆறாய்க் குருதி, அருவியாய் கண்ணீர்

கோவலனை இழந்த கண்ணகியின் சீற்றம் நெஞ்சை எரிக்க,
கண்கள் சிவக்க, நெஞ்சம் கொதிக்க, கட்டிய தாலியை அறுத்த
உறவினை வெட்டி வீழ்த்த, நஞ்சை நாடிய பெண்மை
நெஞ்சில் நிலைத்தவனோடு ஒன்றான மேன்மை

சொந்த பந்தம் காதலைச் சாகடிக்க
சோக வெள்ளம் நெஞ்சை மூழ்கடிக்க
குருதி வெள்ளத்தில் குங்குமம் தந்த உறவு
நஞ்சோடு நங்கையின் கடைசி இரவு

நேர்கோட்டில் வந்த காதல் -ஓர் வளைவில் மறைந்திட,
குங்குமம் கலைந்து, கணவன் கட்டிய மங்கல நாண் அறுந்திட,
காதல், காதல் காதல், காதல் இன்றேல் சாதல் என்றே
நஞ்சோடு கொண்ட உறவு காதலனோடு சேர்ந்த வரவு

சாதிகள் இல்லையடி பாப்பா, குலத்தாழ்ச்சி, உயர்ச்சி சொல்லல் பாவம்,
காதலுக்கு சாதியல்லை மதமுமில்லையே, வேதம் எல்லாம் காதலை
மறுப்பதில்லையே, பாடல் எல்லாம் பொய்யாகி,பழங்கதையாகிப் போனதே,
ஈரவிழிகள் சிவக்குதே நெஞ்சம் எரிமலையாய்க் குமுறுதே

காதலர்கள் சாகலாம், காதல் சாவதில்லை-
தன்னுயிரை ஆகுதியாக்கி மங்கை யாத்த யாகம்,
காதலுக்கு காணிக்கையான அமர காவியம்

ஆணவக் கொலை என்பது ஒரு குடும்பத்தின் உறுப்பினரை
அவர் குடும்பத்துக்கு இழிவு கொண்டு வந்தார் என்று
கருதி அக்குடும்பத்தின் உறுப்பினர்கள் சிலர்
கொலை செய்வதைக் குறிக்கிறது. பொதுவாகப்
பெண்களையே இப்படிக் கொல்கின்றனர்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-04-2024

World Central Kitchen





காணொளிகள் காட்சிப் படுத்திய செய்திகளில்
காஸா மக்களின் வாழ்வோ எரிநரகம்-
கண்ட நல்மனங்களில் ஓயாத அலைகளாய்த் துயரம்
யுத்த நிறுத்தம் கோரி உலகெங்கும் ஆர்ப்பாட்டம்

பல்லாயிரம் உயிர்களைக் கொன்று, பல இலட்சம்
அகதிகளாகத் தொடரும் கொடிய யுத்தம், உணவு, மருந்து
நீர், மின்சாரம் இஸ்ராயேலின் பிரம்மாஸ்திரம், நாளும்
அச்சத்தீயில் வாழும் அகதிகள் வாழ்வோ சாபம்

குண்டுகளால் காஸா எங்கும் நிலநடுக்கம்
கூடுகள் இழந்த தாய்க் குருவிகளோ குஞ்சுகளோடு
பரிதவிக்கும் கொடுந் துயரம், வாழ்ந்த இல்லம்
இடிபாடாக, பிடி சோற்றும் கையேந்தும் நிர்ப்பந்தம்

அன்னமும், நீருமின்றி அல்லாடிய இலட்சோப இலட்சம்
அகதிகளுக்கு, ***அட்சய பாத்திரமாய்*** மாறி உணவு வழங்கிய
உலக உணவு மையம், உணவுப் பொருட்களை ஏற்றி வரும்
வழியில் ஏழு ஊழியர்களைப் பலி கொடுத்த பெருந்துயரம்



குண்டு துளைத்து தீக்கிரையான வண்டி, கொடூரமாய்
கொல்லப்பட்ட ஏழு தொண்டர்களோ அப்பாவி
அட்சய பாத்திரத்தை உடைத்து நொருக்கி
அப்பாவி உயிர்களை நரபலியாக்கிய யுத்த வெறி



உலகு அதிர்ந்திட, கண்டனங்கள் தொடர்ந்திட
மனிதநேயத் தொண்டர்கள் அகாலமாய் மடிந்த சங்கதி,
மன்னிப்புக் கோரிய இஸ்ரேலியப் பிரதம மந்திரி
கண்ணீரில் மூழ்கிய சொந்தங்கள் இழந்ததோ சங்கநிதி

உலகெங்கும் யுத்தங்கள், நாளும் மனிதம் சிந்தும் இரத்தங்கள்
காணொளி, வானொலியில் செய்திகள், கண்டவர், கேட்டவர்
நல்மனங்களில் சொல்லொண்ணாத் துயரங்கள்-காணாத
இறைவனைத் தொழுது அமைதிக்காய் ஏங்கும் நெஞ்சங்கள்

காலையில் கண்ட உறவை, அந்தி மாலையில் காண்போமோ
என்னும் அச்சமோ கேள்வி, கண்ணீரும், குருதியும் மறைந்திட,
புன்னகை நிலைத்திட யார் யாப்பது அமைதிக்கான வேள்வி
ஷலோம், சலாம் அலேக்கும் சாரமற்ற உப்பான தோல்வி

ஒடுக்கப்பட்ட பாலஸ்தீன மக்களின் துயரை
உலகறியச் செய்த காணொளி அல் ஜஸிரா
பயங்கரவாதத்திற்கு துணை போகும் ஊடகம்
தடை விதித்த இஸ்ரேலிய அரசின் அராஜகம்

இன அழிப்பாய் தொடரும் கொடிய யுத்தம், இரவு பகலாய்
குண்டு வீச்சு விமானங்களின் அராஜகம், அன்னையர்,
குழந்தைகளின் ஓயாத அழுகைச் சத்தம், அல்லாவைக்
கதறியழைத்தும் காஸா எங்கும் மனித இரத்தம்

குருதியால் வுழு செய்து, கண்ணீரோடு தொழுது, குர்பானாய்
உயிரைக் கொடுக்கும் அவலம், காஸாவின் வட முனையிலிருந்து
தென் முனைக்கு ஓடிய அகதிகளின் அவல யாத்திரை
கூடார வாசிகளின் முகங்களிலோ கண்ணீர் கறை

அப்பாவி மக்களுக்கு, உணவோ, மருந்தோ, நீரோ
உறைவிடமோ, உரிய பாதுகாப்போ இல்லை
கடத்தப்பட்ட கைதிகளுக்கு விடுதலை இல்லை
அமைதியோ கானல் நீரான நிலை


குருதி தோய்ந்த முடிச்சில் குழந்தையின் உடலம்
கண்ணீர் தோய்ந்த தந்தையின் முகத்தில்
சோக ஊர்வலம், பெற்ற குழந்தைகளை நாளும்
புதைக்கும் அவலம், அமைதியோ எட்டாத உயரம்

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க, எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-5-4-2024

அணுகுண்டு விஞ்ஞானி ஓபன்ஹைமர்



அணுவின் கட்டழகைக் கண்டு மோகித்த அறிவு மனம்,
இலத்திரன்களின் நடனத்தில் தன்னை மறந்து இலயித்தது,
பிரபஞ்சத்தின் இரகசியத்தை அறிய -அணுவின்
ஆடையை உரித்துப் பார்த்திட ஆவல் கொண்டது



அணுவைப் பிளந்திட தோன்றும் நியுத்திரன்கள்
அருகிலுள்ள கருக்களைத் தாக்கி மேலும்
பிளவுகள் தொடர , தொடரும் சங்கிலித் தாக்கம்
வெளிப்படும் சத்தியோ சூரியனை ஒத்த வெப்பம்

அறிவியலின் மையத்தில் ***ஓபன்ஹைமர்*** ஒரு
அழிவியல் சூறாவெளி, லாஸ் அலமோஸ் மேடையில்
அணுவை பிளந்து பார்த்திட, அவர் போட்ட
அறிவியல் சூத்திரங்களோ அழிவின் வழி

ஆனி 16, 1945 அண்டம் அதிரப் பாலைவனத்தில் வெடித்த
முதல் அணுகுண்டு, காளான் மேகமாய் வானத்தில் எழுந்த
தீப்பிழம்பிலே சூரியனை ஒத்த பிரகாசம்-குருஷேத்திரத்திலே
பக்தனுக்கு பகவானின் விஸ்வரூப தரிசனம்?


Major General Leslie Groves and Robert Oppenheimer at the Trinity test site in 1945



"திரித்துவம்" எனப் பெயரிட்ட சோதனை, உலக அழிவுக்கு
வழிவகுத்த இழிவான சாதனை, சாத்தானோடு
ஆதாமின் மைந்தன் புரிந்த ஒப்பந்தம், யம புத்திரனான
அணுகுண்டோ வல்லரசுகளின் பிரம்மாஸ்திரம்

பிரபஞ்சம் உற்ற காயம், மனதை தகிக்க, "பண்டோராவின்
ஜாடியைத்" திறந்த பயம் நெஞ்சை நொருக்க, உலகைப்
பூண்டோடு அழிக்கும் அணுவாயுதமோ விஞ்ஞானம், மனுக்குலம்
உய்ய, அவதார புருஷர்கள் காட்டிய நெறியோ மெய்ஞானம்

"***உலகை அழிக்கும் காலனின் வடிவாய் எனது உருமாற்றம்***"
சிலுவையில் தன்னை அழித்து உலகைப் புதுப்பித்த இயேசுவின்
உருவம் நெஞ்சில் தெரிய, ஆன்மா சிதைய அழுத மனம்.

அணுவைப் பிளந்திட ஒளிர்ந்த வெளிச்சம் அக இருளைப் போக்க,
அழிவின் உச்சத்தில் அறிவுக் கனியின் கசப்போ
அகநிர்வாணத்தைக் காட்ட, வெட்கிய விஞ்ஞானி, சிலுவையிலோ
வாழ்வுக் கனியாய் அரைக் கச்சையோடு மெய்ஞானி

யுரேனியத்தைக் கொண்டு உருவாக்கிய “சின்னப் பையன்”
ஹிரோஷிமாவை எரிக்க, புளூடோனியத்தைக் கொண்டு உருவாக்கிய
“பருத்த மனிதன்” நாகசாகியை அழிக்க, மடிந்த மானுடமோ
இலட்சோப இலட்சம், அணுவிஞ்ஞானி மனதிலே ஓயாத பூகம்பம்



Fat Man 1

அணுவை அறிந்த மனதில் இயேசுவைச் சிலுவையில் அறைந்த
கொடுந் துயரம், கண்கள் நீராட, நெஞ்சம் கண்ணாடிபோல்
நொருங்கிட, கொடிய வெப்பத்தால், கதிர் வீச்சால் உருகிக் கருகி
மடியும் மானுடம், கனவிலும், மனச்சாட்சி வருத்தும் துயரம்



The atomic bombings of Hiroshima and Nagasaki killed tens of thousand Japanese combatants and non-combatants and destroyed dozens of military bases and supply depots as well as hundreds (or thousands) of factories.

இன்பவனமாய் உலகைப் படைத்தவனோ அன்பு இறைவன்
எரி நரகாய் உலகை மாற்றியவனோ அணு விஞ்ஞானி
உள்ளுணர்வின் உயர் நிலையிலிருந்து மின்னலாய்
எரி நரகில் விழுந்த லூசிபராய் ஓபன் ஹைமர்



Little boy

மனிதத்தின் அழுகையும், கண்ணீரும், கொடுந் துயரும்
மனதை நொருக்க, நாளும் மனிதிலே வெடிக்கும்
அணுகுண்டு, அமைதியிழந்த அறிவு மனமோ
குற்றவுணர்வால் தகிக்கும் கொடிய தீப்பந்து




November 1951 nuclear test at the Nevada Test Site, from Operation Buster, with a yield of 21 kilotons. It was the first U.S. nuclear field exercise conducted on land; troops shown are 6 mi (9.7 km) from the blast.




அறிவு வேட்கையால் யாத்த அசுர யாகம், ஊனை
உருக்கும் வெப்பத்திற்கும், உருவழிக்கும் கதிர் வீச்சுக்கும்
ஆகுதியான இலட்சோப இலட்சம் உயிர்களோ பரிதாபம்
பெயரும், புகழும் உச்சத்தில், இதயமோ எரி நரகில்

வரலாற்றில் “பிரம்மாஸ்திரமாய்” வல்லரசுகளின்
கைகளில் அணுவாயுதம், அணுவாயுதப் பரம்பலால்
அமைதியிழந்து, அழிவின் விளிம்பில் உலகம்,
அறிவுக் கனி உண்டால் மரணம் இறையிட்ட சாபம்



Oppenheimer claimed that, in the moments after the detonation, he recited a line from Hindu scripture in his mind "Now I am become Death, the destroyer of worlds

அணுவைப் பிளந்த மனிதன் அக இருள் நீக்க
“ஒளிக்காய்” ஏங்கினான், குற்ற உணர்வு
இதயத்தைப் பிளக்கும் அணுகுண்டாய் வெடிக்க
அமைதி தேடி இன்றும் அலைகின்றான்




Oppenheimer learning from Albert Einstein

அழிவில் கிடைப்பது வெற்றியல்ல
அன்பால் பெறுவதே மெய்யான வெற்றி
அன்பே சிவம்-அகிம்சையோ அரிய தவம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-04-2024

ஆயுத எழுத்து





வல்லரசுக்களின் வரண்ட நீதியில்-விறகுக்காய்
வெள்ளரசு மரத்தையும் வெட்டி விற்கும் அவலம்
வெள்ளைப் புறாவையும் சுட்டு வீழ்த்தி
உணவு சமைக்கும் துயரம்


நீதிதேவதை நிரந்தரக் குருடியாக, கள்ளத் தராசில்
நிறுவைகள், வறிய நாடுகளுக்கு ஒரு நீதி-வளமிக்க
நாடுகளுக்கு ஒரு நீதி, ஐ.நா.வின் அநீதி
செல்லாக்காசான அமைதி,

வல்லரசுகளின் சதுரங்கத்தில் அமைதியைக் குலைத்து
ஆயுதப் போராட்டங்களைத் தூண்டும் பஞ்ச தந்திரம்
ஆசிய, ஆபிரிக்க, மத்திய கிழக்கில் ஓயாத யுத்தம்
ஆயுத விற்பனையோ இழிந்த விபச்சாரம்

வல்லரசுப் போட்டியால் வளரும் பிரிவினையால்
உலகே இரண்டான நாசம், அணுவாயுதப்
பரம்பலும், ஆயுத விற்பனையும்-மூன்றாம்
உலக யுத்தத்திற்கு வழிவகுக்கும் விநாசம்

கள்வர் குகையான ஆலயங்களில் கற்பனைத்
தெய்வங்களுக்கு வழிபாடு, வேதங்களும்,
ஆயுதங்களும் வியாபாரம், மதப்பயங்கரவாதம்
அங்கீகரிக்கப்பட்ட அநாசாரம்

வரலாறு எங்கும் வல்லரசுகளின் அராஜகம்
சிந்தியதெல்லாம் சகோதரன் ஆபேலின் இரத்தம்
சிதைத்துச் சீரழித்த அன்னையர் குலம், சிலுவை,
தொப்பி, நீறு யுத்த வெறியரின் அணிகலன்



ஆயுத வியாபாரம் ஓயாத வரை-உலகில்
அமைதியில்லை, உண்மை விடுதலை அளிக்கும்
புரியாதவரை தனி மனிதனுக்கு நிம்மதியில்லை
மனம் கழித்தவனுக்கே நிர்வாண நிலை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-04-2023

ஈழத் தாயின் ஒப்பாரி



ஆடிப் பாடிய எங்கள் சொந்தங்கள் அகாலமாய்
மடிந்து மறைந்து போயின-எங்கள் புன்னகையைப்
பறித்திட, கண்ணீரில் நிலைத்த சொந்தங்களால்
ஊரெங்கும் கேட்கும் ஓயாத ஒப்பாரி



எங்கள் அழுகுரலை குண்டுகளின் அதிர்வுகள்
மறைத்திட, எங்கள் அவலம், காணொளியிலும்,
வானொலியிலும் இரட்டடிப்பு செய்யப்பட
உலகம் அறியாத இன அழிப்பாய் எம் அவலம்

பசியும், பயமும் எம்மை வருத்த
தீயும், நோயும் எம்மைத் துரத்த
அடைக்கலமின்றி அகதிகளான இனம்
காட்டிக்கொடுப்பான போராளி இனம்

எங்கள் ஓலம் பாக்கு நீரிணையைக் கடந்து இமயத்தில் எதிரொலித்தும்,
இரங்கிட யாருமில்லை, எங்கள் கண்ணீர் ஏழ் கடலை உவர்ப்பாக்கியும்,
எம் செந்நீர் மண்ணைச் சிவப்பாக்கியும் எம் துயருக்காய்
குரல் கொடுக்க யாருமில்லை, ஈழத் தமிழர் நாம் அநாதைகளானோம்



புலிகளை வேட்டையாட-அப்பாவிச்
செம்மறியாடுகளை பலி எடுத்தார்
மலையரவத்தை அழிக்க, புள்ளி மான்களை
இரையாக்கினார் யுத்த வெறியர்

அணையாத் தீ அடிவயிற்றில் எரிய ஓயாத கண்ணீர்
விழிகளில் வடிய-ஒப்பாரியும், புலம்பலும்
அலை ஓசையாய் முழங்க, கண்ணீர்த் தவத்தில்
சொந்தங்கள், அநாதை, விதவைகளாய்ப் பந்தங்கள்



தந்தி அறுந்த எங்கள் யாழில் அவலப் பண்
மீன் பாடும் தேன் நாடோ நிலவிழந்த வான்
அன்னையர் விழிகளிலோ கண்ணீர் அருவி
அறுந்த தாலிகளோ தங்கையருக்கு வேலி?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-04-2023

ஈரவிழிக் காவியம்

எங்கள் கண்களின் ஈரம் காயவில்லை
இதயத்தின் காயங்கள் ஆறவில்லை
கடத்தப்பட்ட உறவுகள் கண் மறைந்த நிலை
கொல்லப்பட்ட உறவுகள் மண்ணில் புதைந்த நிலை



பூண்டோடு எம்மினத்தை அழிக்க
பூர்வகுடிகள் வாழ்ந்த மண்ணைப் பறிக்க
ஹமாஸின் பயங்கரவாத யாப்பு,
இறை தேர்ந்த குலத்திற்கு அபாயமான கோப்பு



எங்கள் திருமலையில் அவர்கள்
தொழுகைக் கூடம்-அழுகைச் சுவரில்
எங்கள் கண்ணீர்ப் போராட்டம்-பல்லாண்டு
அடிமையாய், நாடோடியாய் எம் திண்டாட்டம்

எங்கள் வரலாறு எங்கும் யுத்தம்
அடிகைளாய் சிறையெடுக்கப்பட்ட அவலம்
அறுபது இலட்சம் மக்கள் அவலமாய் மடிந்த
துயரம், வாக்களித்த பூமியில் எம் தஞ்சம்

கன்னியரும், காளையரும் ஆயுதமேந்திக் காவல் செய்யும் துயரம்,
யுத்தக் களமான வாழ்வில் நாளும் போராட்டம்
மூச்சிருக்கும் வரை நாட்டைக் காப்போம் எம் திட சங்கற்பம்
இறைகுலம் நாம் என்ற ஒரே ஆனந்தம்





கொண்டாடிய இசை விழா கொலைக் களமாக
ஹமாஸின் வெறியாட்டம், அன்னையரைக்,
கன்னியரை வல்லாங்கு செய்து, அப்பாவிகள்
ஆயிரம் பேரைக் கொன்ற வெறியாட்டம்

கண் காணாத சுரங்கத்தில் எம்மவர் சிறையிருப்பு
நாளும் ஆர்ப்பாட்டமான எம் போராட்டமோ
கவனயீர்ப்பு, சிறை மீட்க நடத்தும் யுத்தம்
உலகே எமக்கு எதிரான வருத்தம்

அமைதி என்பது இறை ஆசீர்-இறை
தேர்ந்த குலமே இறைவனை யாசி
உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை-பூவுலகில்
நல்மனத்தவருக்கே அமைதி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-2-5-2024

இறைவன் கண்ட கனவு



இன்பவனத்தின் கனிகள் அனைத்தையும்-மனிதா
நீ உண்ணலாம், ஆனால் நன்மை, தீமை அறியும்
அறிவுக்கனியை மட்டும் புசிக்காதே-அதிலிருந்து
நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்-(தொ.நூல் 2-17)



வாழ்வுக் கனியிருந்தும், கடவுளைப்போல் ஆக விரும்பி,
அறிவுக் கனியைத் தேர்ந்த மனிதன்
வல்லமைதான் இறைவன் என்றெண்ணிய மூடன்
குழந்தை மனம் மடிந்து, அறிவு மனம் விழித்திட
நாமே இறைவன் என்ற ஆணவத்தில் நிலைத்த அசுரன்

பல்கிப் பெருகி, பூமியை நிரப்பி படைப்பை ஆளுங்கள்
இறைவன் கண்ட கனவு கலைந்து போனது- காயீன்
ஆபேலைக் கொல்வது வரலாறாய்த் தொடர்ந்திட,
இறைவனும், இன்பவனமும் கண் மறைந்திட
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம் நிதரிசனமானது



இறைவன் படைத்த பூமி ஓயாத யுத்தங்களால்
எரி நரகானது, சிந்திடும் குருதியால் மண்ணும்,
கடலும் சிவப்பானது, குண்டுகளின் தீயால்-நாளும்
உயிர்களும், உடைமைகளும் எரிந்து சாம்பலாகுது



மதங்களைப் படைத்த மனிதன், இறைவனைப்
பிரித்து பங்கு போட்டான், நல்மனங்களில்
வாழத் துடிக்கும் இறைவன், ஆலயம், பள்ளி, விகாரை
கடந்து, அகதியும், அநாதையும், நாடோடியுமானான்



அழுகைச் சுவரும், அல் அஃக்ஸாவும்,
பாபர் மசூதியும், இராமர் கோயிலும் இறைவனைத்
துரத்திட, மனம் மாறாத மதவாத மனிதன்

ஏலி, ஏலி லமா சபக்தானி , என் தேவனே, என் தேவனே
ஏன் என்னைக் கைவிட்டீர் எனக் கதறும் மனுமகன்
சிலுவையடியில் எள்ளி நகையாடும் மதவாத மனிதன்

வேதங்கள் எல்லாம் வெற்றுப் புத்தங்களாயிட
பழம் பெருமை பேசி மனிதத்தை பிரித்து நாறிட
அமைதி கானல் நீரானது, மதப்பயங்கரவாதம்
உலகை அச்சுறுத்த, நல் மனங்கள் வருந்தி, வாடுது

உலகெங்கும் பல கோடி அகதிகள்
மதம், இனம், மொழி கடந்து யுத்தங்களின்
கொடிய பக்க விளைவுகள், அநாதை,
அங்கவீனர், விதவைகளின் ஓயாத அழுகைகள்



ஆயுதங்களோடு செய்யும் தொழுகை அல்லாவைப் பரிகசிக்க
காவிகள் இடித்த பாபர் மசூதி இராமனை எள்ளி நகையாட
அழுகைச் சுவர் யாவேயை கூவியழைக்க, சிலுவைப் போரில்
கிறிஸ்தவம், சிலுவையிலோ அநாதரவற்ற மனிதனாய் கிறிஸ்து


பாகிஸ்தான் எல்லையில் பரிதவிக்கும்,
பல இலட்சம் ஆப்கான் அகதிகள்,
காஸா எங்கும் பலிக்கடாவாய் பலியாகும்
பல்லாயிரம் அப்பாவிகள், குழந்தைகள்



சூடான், சிரியா, யெமன், நைஜீரியா, உக்ரேன்
காஸா எங்கும் யுத்த முழக்கங்கள், அறிவுக்கனியால்
அழிவாயுதங்களைப் படைத்த மனிதன், ஆணவத்தால்
உலகை அழிக்கும் சாத்தனாய் யுத்த வெறியன்

அறிவின் உச்சத்தில் பேரழிவு ஆயுதங்களைப்
படைத்து அழிவைத் தேடிட, அமைதி எட்டாத
நிலவானது, அறிவக் கனியை உண்ணும் நாளில்
மனிதா நீ சாகவே சாவாய், இறை சாபம் நிஜமானது





நீறணிந்து, நெஞ்சில் சிலுவையணிந்து, தொப்பியணிந்து
காவியணிந்து தொழும் மதவாதிகளின் மனங்களிலோ
இரத்த வெறி, அறிவுக்கனியுண்ட மனிதன் படைத்த
மதங்களிலோ அப்பாவிகளின் குருதிக் கறை

ஏழை, அகதி, அநாதை அங்கவீனருமாய் மாறிய
பல்லாயிரம் உறவுகள், அகாலமாய் மாண்ட
உறவுகளை எண்ணிப் புலம்பிட கலைந்த கனவுகள்

கள்வர் குகையான ஆலயங்கள்,கல்லும், சிலையும்,
சொல்லும், சூனியமுமாய்க் கடவுள் "கள்",
அன்பே கடவுள், நல்மனத்தவருக்கே அமைதி
என்றுமுள்ள தர்மத்தின் நியதி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-03-2024

இசையும், ஓசையும்

ஏலத்திற்கு வந்த புகழ் பெற்ற வயலினை
இலட்சங்களால் சொந்தமாக்கிய செல்வரோ
அரிய இரசிகர், இசையும், மௌனமும்
இசைந்தாடும் கலையை அறிந்த கலைஞர்



ஆடம்பர மாளிகையில் அலங்காரமாய்
அறை மத்தியில் அதன் இருப்பு, காண வந்தவருக்கு
இல்லை என்று சொல்லாமல் காட்சிப் படுத்திய
செல்வர் மனதில் ஆனந்தத்தின் திளைப்பு



பார்த்த சாதாரண மக்களுக்கு ஏனோ இத்தனை பணம்
இந்தக் கருவிக்குப் புரியவில்லை, மரமும், தந்தியும்
இணைந்த கருவிக்கு ஏனோ இந்த உபாசனை
யானையைப் பார்த்த குருடர்களின் ரசனை மாறவில்லை

கலைஞாகளும் கண்டு களித்தார், இசை
மீட்க அனுமதி பெற்றார், ஆயினும் மீட்டிய இசை
இதயத்தை தொடவில்லை, எழுந்த
கானத்தில் உயிரிசையின் பரவசமில்லை

பல மாதங்கள் போயின -ஒரு நாள் மாலையில்
வயதான ஒருவர் வந்திருக்கிறார், வயிலினைப் பார்க்க
அனுமதி கேட்கிறார், பணியாளர் உரைக்க
பரிவோடு பார்வையிட அனுமதித்த செல்வர்



வந்தவரைக் காண நெஞ்சில் ஓர் பரவசம்-வயலினை
எடுத்துக் கொடுத்தார் பார்த்து மகிழுங்கள்-யாரையும்
இலகுவில் தொட அனுமதிப்பதில்லை-ஆனால் உங்களுக்கு
இல்லை எனச் சொல்ல என் மனம் இடங்கொடுக்கவில்லை

தொட்டுக் குழந்தையைப்போல் பரிவோடு அணைத்தவர்
விழிகளில் ஆனந்தப் பரவசம், இசை மீட்க
எழுந்த நாதத்தில் இயற்கை எழுந்தாட, இறைவனும்
மகிழ்ந்து கூத்தாட ஓங்கார நாதத்தின் பிரசன்னம்

அருவியாய் விழுந்து. நதியாய் ஓடி, அலை வீசும்
கடலில் ஆனந்தச் சங்கமம், தென்றல் தழுவிட,
தேமதுரக் குயில்கள் இணைந்து இசை பாட
தோகைகள் ஆடப், புள்ளினத்தின் பூபாளம்





கலா இரசிகரான செல்வருக்கு ஆனந்தம் தாங்கவில்லை
கட்டிப்போட்ட இசையில் காலம் போனது தெரியவில்லை
வீட்டாரும் வியந்து இரசிக்க எழுந்த அலை அலையான இசை
ஓசையும், மௌனமும் கடந்த ஏழ் ஸ்வரங்களின் கீதை

கருவியும், கலைஞனும் மறைந்திட
இசை மழை பொழிந்திட
எங்கும் பரவசம், இதயத்திற்கும், செவிக்கும்
இன்பம் தரும் மதுரசம்

இசை மழை நின்றிட பெரியவர் பரிவோடு வயலினை
குழந்தையைக் கொடுப்பதுபோல் கொடுத்திட,
அரிதிலும், அரிதான இசை ‘பெரியவரே, யார் நீங்கள்’’
புகழ் பெற்ற வயிலின் மேதையின் பெயர் கேட்டார்

பிரிந்த தாயும், குழந்தையும் இணைந்த மகிழ்ச்சி
கலைஞனும், கருவியும் சேர்ந்திட பிறந்த இசையோ
கான மழையான அரிய நிகழ்ச்சி, எனது வயலின் இது
ஆனால் உங்களிடம் இருப்பதோ நல்லது



சொன்னவர் வந்த வழியே மறைந்திட
இசையால் சொக்கி நின்றவர்-வயிலினை
அரும் பொக்கிஷம் என்றே தொழுது, கலைஞனை
மா மேதை என வாழ்த்திப் போற்றிய செல்வர்

கலைஞன் மீட்டுவதே இசை, மற்றெல்லாம்
காதைப் புண்ணாக்கும் ஓசை, கருவியும்.
கலைஞனும் இணைந்திட பிறப்பதே தேவராகம்,
ஏனையவை வர்த்தகம், வாணிபம்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-29-03-2024

இசையும், துப்பாக்கி ஓசையும்





இரவின் அமைதியைப் பழித்து, இசை விழாவைச்
சிதைத்து ஒலித்த ஹமாஸின் போர்ப் பறை
எல்லை தாண்டி வெஞ்சினத்தோடு உயிர்களை
வேட்டையாட, மண்ணெங்கும் குருதிக் கறை

உயிர் மெய்யைத் துளைத்த குண்டுகள்
உயிர்க் குருதி சிந்திட மடிந்த சொந்தங்கள்
வான் பரப்பில் ஒளியூட்டி நாட்டை எரித்த பல்லாயிரம்
எறிகணைகள், நாடெங்கும் ஒப்பாரி, புலம்பல்கள்

கொள்கை முரண்பாட்டில் கலக்கம்
பிறந்த மண்ணில் போர்ப் பறையின் முழக்கம்
மண் சிவப்பாக, மனிதம் மடிந்திட
தொடரும் யுத்தம், வரலாறு எங்கும் இரத்தம்



பிரளயத்தின் நடுவே அமைதிப் பேச்சு வார்த்தையின் கிசுகிசுப்பு,
சுடலைச் சாம்பலில் மாவீரர்களின் புத்துயிர்ப்பு, இனம், மதம்
கடந்து. அன்பும், உண்மையும் வாழ்வானால் சத்தமிழக்கும்
யுத்தப்பறை, நிலைத்த சகோதரத்துவமோஅமைதியின் மறை

பேச்சு வார்த்தை முறிந்திட சலசலப்பு, இரத்தம் சிந்திட
பாரிய குண்டு வெடிப்பு, அப்பாவி மக்களோ
அகதிகளாய் கண்ணீர் குருதியில் பரிதவிப்பு
மனதிலே ஆறாத ரணத்தின் கசப்பு



யுத்த தாங்கிகளின் அணிவகுப்பு, இராணுவத்தின் படையெடுப்பு,
வெட்ட வெளியில் அகதிகளின் குடியிருப்பு, இல்லிடங்களோ
இடிபாடான கசப்பு, உணவு, மருந்து, நீருக்கு உறவுகள்
தவமிருந்து அகாலமாய் இறப்பு, துணி முடிச்சான புதைப்பு

தேசமெங்கும் குண்டுகளால் நிலநடுக்கம்
தீ மழையால் வாழிடங்களோ எரி நரகம்
மண்ணைச் விவப்பாக்கும் குருதி, மனங்களை
கசப்பாக்கும் கண்ணீர் அருவி


இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra

ஹாஜிபாய்

ஹஜ்ஜிக்குப் போவேன் என்னும் மாறாத கனவில்
வல்ல அல்லாவைத் தொழும் ஏழை, பள்ளி வாசல் முற்றம்
கழிப்பறையைக் கூட்டி சுத்தம் செய்து முழு மனதோடு
கூலி ஏதும் வாங்காது மகிழும் காளை



தொழ வருவோரை சலாம் சொல்லி வாழ்த்தி
ஹஜ்ஜீக்குப் போகிறேன் எனக்காய்த் துவா செய்ய
மறவாதீர் களிப்போடு வேண்டும் அன்பு மனம்
கள்ளங் கபடற்ற ஏழையின் குணம்



ஹாஜிபாய் எப்போது போகிறீர்கள் ஹஜ்ஜிக்கு
என கேலி செய்யும் சிறுவர் கூட்டம்,
கடிந்தும் ஒரு வார்த்தை சொல்லாது, களிப்போடு
இன்ஷா அல்லா சீக்கிரம் போவேன் நம்பிய மனம்

தொழ வருவோர் வாகனங்களைத் துடைத்துக், கழுவி
கூலி வேண்டாத மனம், கொடுப்பதை வாங்கி
நன்றியோடு வாழ்த்தி, துதித்து களிப்போடு
அல்லாவைத் தொழுது மகிழும் ஈமானாய் குணம்

வருடங்கள் பல கழிந்திட, நம்பிக்கையோ வற்றாத
புது வெள்ளமாய் ஹாஜிபாயின் மனதில் நிலைத்திட
ஹஜ்ஜிக்குப் போவேன், கடன் முடித்தே-அல்லாவோடு
சுவனத்தின் இன்புறுவேன் கல்லில் பொறித்த எழுத்தானது



ஒரு நாள் தொழ வந்த ஒருவரின் வாகனத்தை
மறுத்தும் கழுவி கூலி கேட்காத ஹாஜிபாய்,
ஹஜ்ஜீக்குப் போகிறேன் எனக்காய் துவா செய்யங்கள்
சலாம் சொல்லி பணிவோடு வேண்டிய ஏழை

வந்தவரோ பயணிகளை ஹஜ்ஜீக்கு அனுப்பும்
பயண முகவர், ஹாஜி பாய், எந்த முகவர் மூலம்
ஹஜ்ஜீக்கு போறீர் வினவிட, எனக்குத் தெரியாது,
ஆனால் ஹஜ்ஜீக்குப் போகிறேன் மாறாத பதிலானது

வந்தவர் கூடவே அழைத்துச் சென்று ஹஜ் கடமைகளை
முடித்திட உதவிட, கண்ட கனவு பலித்திட, அல்லாவின்
அளவற்ற கருணை நெஞ்சை நிறைத்திட
மக்காவில் மௌத்தாக பேறு பெற்ற புனிதர்

எதையும் எதிர்பார்க்காமல் பள்ளிக்கும். பக்தர்களும்
தொண்டு செய்து, வாழ்வால் அல்லாவைத் தொழுத
பக்தனோ ஏழை, பக்தனின் ஆசையை நிறைவேற்றி
மகிழ்ந்த அளவற்ற அருளாளனோ ரஹ்மான்

ஆசையறியாது, ஆணவம் புரியாது
அன்பில் நிலைத்த வெள்ளை மனம்
ஐவேளை கடந்து எவ்வேளையும் வல்ல
அல்லாவைத் தொழும் சகாபாவாய் மனம்



உள்ளம் நெகிழ, உயிர் மெய்யில் ஆனந்தம் நிலைக்க,
ஐயனே உன் கருணை பெரிது, அல்லாவைப்
போற்றிய மனம் , ஆவியையும் , அல்லாவின் காலடியில்
ஈந்து அமைதியில் நிலைத்த புனித குணம்

மாசற்ற குழந்தை மனதில்-ஹஜ் யாத்திரையோ அருளாளன்
தருவார் என்ற மாறாத நம்பிக்கை, பள்ளிக்கும், பக்தருக்கும்
தொண்டு செய்த பக்தனோ உள்ளத்தே உண்மையான ஹாஜி
க∴பாவைத் தன்னுள் கொண்ட உத்தம அன்ஸார்


உம்ராவும், ஹஜ்ஜீம் தவமாய்ப் பல முறை செய்தவர்
அடையாத வரம், ஒரு முறை ஹஜ் கடன் முடித்தே
சுவனம் போக பக்தனுக்கு கிட்டிய வரம் , வாழ்வைத்
தொழுகையாக்கிய ஹாஜி, மெய்யான மூமீன்

(الرحيم الرحمن الله بسم)


(الله أكبر)

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-03-2024

இசை மேதை-*Ludwig van Beethoven*




இசை கேட்டு புவி அசைந்தாட, ஏழ் கடலும்
வானும், நிலவும், கோள்களும், கதிரும் நடனமாட
இறைவன் மீட்கும் இசையோ ஓம் என்னும்
ஓங்கார நாதம், பிரணவ கீதம்



வான வீதிகளில் தெவிட்டாத தேவதைகளின் ஊர்வலம்
கான மழை பொழியும் புள்ளினங்களின் பூபாளம்
கருவறையிலிருந்து வெளிவரும் குழந்தையின் அழுகை
சீராட்டும் அன்னையின் தாலாட்டு எங்கும் இசை

கடலிலும் அலையின் இசை, காற்றிலும்
தேவராகங்களின் இசை, கொட்டும் மழையிலும்,
வெட்டும் மின்னலைத் தொடரும் இடியிலும் இசை
அருவிலும், நதியிலும் ஆனந்த இசை



இதயத்துடிப்பிலும் உயிரின் இசை
மௌனராகமாய் மரணத்தின் இசை
புள்ளினத்திலும் இசை, மலரும் பூக்கள் கண்டு
வண்டும், தேனியும் பாடும் மெல்லிசை



இசையின் பிரமாண்ட அரங்குகளை அதிரச் செய்யும்
பீத்தோவனின் சிம்பொனி, கேளாத காதுகள்
இசைக்கும் இசை, தேன் மழையோ பூ மழையோ என
இரசிக்கும் மனம் புளங்காகிக்க தேவராகமாய் இசை

இசைமேலுள்ள ஆத்மார்த்த காதல்
வயிலின் வழியாய்ப் பொழிய, அருவியாய் விழுந்து.
நதியாய் ஓடித், தென்றலாய்த் தழுவி,
கடலில் சங்கமிக்கும் பேரானந்தம்.



மௌத்தின் மீது மகத்தான யாத்திரை, ஏழ் ஸ்வரங்களை
கடந்த புனிதப் பயணமாய் சிம்பொனி, துள்ளி விழும்
அலையும் நின்று இரசிக்க, அசையாத மலையும் ஆடிச் சிரிக்க,
தென்றலாய்த் தழுவி அமுதைப் பொழியும் நிலவாய் இசை

இருளில் ஒளிரும் மின் மினிகளாய், இடிபோல் முழங்கும்
போர் முரசங்களாய், காதலியின் இன்பத் தழுவல்களாய்
நவசரங்களின் கூட்டு, ஏழ் சுரங்களின் தாலாட்டு
இதயம் துள்ளி ஆட, சுவாசம் தளர்ந்து வீச மனதிலே பராட்டு



விதி செவிப் புலனைப் பறித்தும், விதியை
எள்ளி நகையாடிய இசை, இரசிகர்களை
இசையால் விருந்தோம்பி, மருந்தாய்க்
குணமாக்கி, மகிழ்வித்த இசைச் சக்கரவர்த்தி

ஏழ் ஸ்வரங்களும் எழுந்தாட, தென்றலும், இடியும்,
மின்னலும் கூத்தாட, இயற்கை ஆர்ப்பரிக்க,
இறைவனும் மகிழ்ந்தாட, இசையுலகிற்கு மகத்தான
தொண்டாய் மாமனிதன் பீத்தோவனின் இசை



எண்ணற்ற இசைக் கலைஞர்களின் இசையில்
இன்றும் வாழும் பீத்தோவனின் குறிப்பு
இசை ரசிகர் மனங்களில் அன்னாரோ-என்றும்
கல்லில் பொறித்த எழுத்தாய் நிலைப்பு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-29-03-2024

கலைஞனும் இரசிகனும்



பரபரப்பான ரெயில் நிலைய வாசலில்
பரவசமான வயிலின் இசை, இசை மீட்டும்
கலைஞனோ ஏழை, இரந்திட வாசிக்கும்
வாசிப்பில் மாமேதையின் கீதை

வருவோர், போவோராய் மக்கள் கூட்டம்
பரபரப்பான வாழ்வில், நின்று
இசையை இரசிக்க இரசிகனாய் யாருமில்லை
சுண்டி வீசிய நாணயங்களோ சில்லறை



தாயோடு வந்த சிறுவன், தயங்கி நின்று
இசையை இரசிக்க, காசு போட்டு கையைப்
பிடித்து அழைத்த அன்னை, கந்தை
கலைஞனின் அலங்காரமான தொல்லை

காலை முதல் மாலை வரை-ஏழையின்
இலவச இசை மழை, நனைந்து இரசிக்க-இரசிகனாய்
எவருமில்லை, காற்றோடு போன தேவராகம்,
வாழ்வோ மனிதனுக்குப் போராட்டம்

அந்தியில் முடிந்த கச்சேரி, பொறுக்கிடச்
சில்லறையும், தாளுமாய் காசு, ஏனோதானோ
என்று இரங்கிய மனம் இட்ட பிச்சை,
அமுத இசையோ மெய்யான இரசிகனுக்கே தீட்சை



மறு நாள் பத்திரிகையில் புகழ் பெற்ற இசை மேதையின்
வயிலின் கச்சேரி, நகர மண்டபத்தில் விளம்பரம்,
நுழைவுச் சீட்டோ பல நூறு டொலர், களை கட்டிய
கச்சேரியில் இரசிகர்களின் ஆனந்த ஆரவார இசை

கச்சேரியை இரசித்த மேதவிகளோ இசைக் கலைஞர்கள்
பார்வையாளராய் தம் சிறப்பை உயர்த்திடப் பல நூறு டொலர்
செலுத்தி முன்னிருக்கையில் அமர்ந்தவராய்ச் செல்வர்கள்
ரெயில் நிலையத்தில் ஒலித்த அதே கானம்,
ஏழையும், மேதையுமாய்க் கலைஞனின் கோலம்

அநாமதேய தெருக் கலைஞனானபோது
அற்புத இசையை இரசிக்க யாருமில்லை, தேவ
கானத்தை நின்று கேட்க மனங்களில்லை



கள்ளுச் சந்தையில் பாலுக்கும், மீன் சந்தையில்
வாச மலருக்கும் மதிப்பில்லை, வைரத்தை
கண்ணாடிக் கல்லாய் மதிப்பிட்ட நிந்தைகள்
பன்றிகளுக்கு முன் தூவிய முத்துக்கள்

காதில்லாத மனிதர் முன் இசைத்த தேவராகம்
கண்ணில்லாத மனிதர் முன் காட்சிப் படுத்திய வண்ண ஓவியம்,
முள்ளென்று பலாவைப் புறந்தள்ளிய மூடர், தெருக்கலைஞன்
பிச்சைக்காரன் என்று தம்மைத் தாமே இழிவு செய்த மடையர்

கடையில் இருந்தால் கல்லும் சிற்பம், கோயிலில் இருந்தால்
அதுவே வழிபடும் தெய்வம், இருக்குமிடத்தில் இருந்து
கொண்டால் எல்லாம் சௌக்கியம், ஏழையாய்ப் பிறந்ததால்
இயேசு தச்சன் மகன் மதவாதிகளின் வியாக்கியானம்

ஓசையும், மௌனமும் கலந்ததே சிம்பனி,
அஞ்ஞாதவாசம், வனவாசமாய் பாண்டவர் வாழ்வு,
ஞானத்தை அடையத் தனிமையே புத்தர்
அறிவுறுத்திய பெருவழி, விழிப்புணர்வே ஒளி

காதறுந்த ஊசியும் வராது காண் கடை வழிக்கே
அனுபூதியில் உணர்ந்தவன் வாழ்வோ
தண்ணீரில் இருக்கும் தாமரை, தனித்திரு,
விழித்திரு, பசித்திரு நிலைவாழ்வு உனது

இசை ஞானி பீத்தோவனுக்கோ கேட்கச் செவியில்லை
இருந்தும் மீட்டிய இசையோ இசை மேதைகளுக்கு
வரமான வேள்வி -இரசிக்க மனதுள்ளோரே இரசியுங்கள்
ஆத்மாவின் இராகம் இசை புரிந்தவருக்கே தெரிந்த மொழி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-25-03-2024

கானம் மறந்த புள்ளிக் குயில்





யாழும், குழலும் இசைந்து ஒலிக்க, பறையும்,
முரசும் ஒன்றாய் அதிர்ந்து முழங்க-
இசை வெள்ளத்தில் கானம் பாடிய வானம் பாடிகள்
நிலவொளியில் களி நடனம் புரிந்த கலாபமயில்கள்

கருவானில் நிலா உலாவர-கண் சிமிட்டி
விண்மீன்கள் காதல் சொல்லிட
தென்றலில் மிதந்தாடும் வெண்மேகங்கள்
தேனிசையில் தம்மை மறந்தாடிய மக்கள்

விண், மண் அதிர நடந்த ஹமாஸ் தீவிரவாதிகளின்
அதிரடித் தாக்குதல், ஆயிரமுயிர்கள்
அகாலமாய் மடிந்திட பல நூறு கைதியாய் மாறிட
இஸ்ராயேல் எங்கும் ஒப்பாரி, புலம்பல்கள்

வேடன் வலைப்பட்ட புள்ளிமானாய்,
வல்லூறின் கொடுங்கால்களில் சிறைப்பட்ட
மணிப்புறாவாய் கைதியான பெண்மை,
வாழ்வே மாயம் என்றான உண்மை,

அச்சத்தில் கழியும் நொடிகளும் யுகங்களாகும்
உச்சத்தில் சிந்திடும் வியர்வையும் குருதித் துளிகளாகும்,
சுவாசம் பெருமூச்சாக, சுரங்கத்தில் சிறையிருப்பு
சுந்தரம் இழந்த வதனத்தில் சோகத்தின் குடியிருப்பு

நெய்யின்றி நீள் குழல் வாட, நீர்
சிந்தி மைவிழிகள் சோரக், கதிரும் நிலவும்
காணாச் சுரங்கத்தில் கன்னி மயிலின் வாழ்வு,
குண்டுகளால் அதிரும் காஸா நிலப்பரப்பு

மண் எங்கும் ஓயாத யுத்தம்-விண் எங்கும்
விமானங்களின் சத்தம், சத்தமின்றிப் பாயும் இரத்தம்
நல்மனங்களில் அமைதிக்கான ஏக்கம்
உறவுகள் நெஞ்சங்களில் இமயச் சோகம்

தூக்கமின்றிச் சோர்ந்த விழிகள் துயரத்தில் நிலைக்க
ஏக்கத்தோடு அகாலமாய் மடிந்த உறவுகளை எண்ணி
பூ மனம் புலம்ப, திருவிழாவே கொலை விழாவாய்
மாறிய அவலம், கன்னியோ கைதியான துயரம்

A combat medic told the AP that he came across half a dozen bodies of women and men with possible signs of sexual assault when he reached one of the attacked communities.

One girl had been shot in the head and was lying on the floor, her legs open and pants pulled down, with what looked like semen on her lower back, said the medic who spoke on condition of anonymity because his unit was classified. Other bodies had mass bleeding around the groin with limbs at distorted angles, he said.

At the Shura military base where victims are being identified, Shari Mendes, a member of the army reserve unit that deals with the identification and religious burial preparation of female soldiers, said some of the women's bodies came in with little clothing, such as parts of their pajamas. Some only had bloodied underwear.

சுரி குழல் முகர்ந்து, விழிகளால் சுந்தர மேனியளந்து
நீராடப் பணிந்தவன், நீரல்லியைப் பறித்து
நீங்காத காமம் தணித்திட, நீள் விழிகளில் கண்ணீர்
மொழிகளிலே அழுகை, நெஞ்சிலே செந்நீர்



Released hostage Amit Susanna recounts sexual assault at hands of Hamas captor

உள்ளம் குமுற, உயிர் மெய் அனலில்
விழுந்த புழுவாய்த் துடிக்க, தள்ளவிழி நீரரும்ப
தன்னை மறந்து கல்லாய்க் கிடந்தவளை
கழிவிரக்கமின்றிச் சிதைத்து காமம் தணித்த கயவன்

உள்ளம் ஊனமாக, உயிரோ ரணமாக
எண்ணமெல்லாம் இறைவனை நினைந்தழ
வல்லாங்கால் வண்ணமிழந்த ஓவியம்
வன்புணர்வால் மூளியான கலைச்சிற்பம்

பகையறுக்கும் வெஞ்சினமும், துஞ்சிடா அஞ்சிடா வீரமும்,
யுத்த தந்திரமும் அழகல்ல, கைதியான வஞ்சியரை
காமப் பொருளாய்க் கொள்ளாது, பண்போடு நடத்துதல்
ஐவேளை தொழும் அழகிலும் பேரழகு

அச்சத்தில் அருவியாய் சிந்திய வியர்வையால்
உடையெல்லாம் ஈரம், உச்சத்தில் உறவுகள் சிந்திய
குருதியால் மனமெங்கும் ஆறாத காயம்,
குரங்கின் கை பூமாலையாய் கன்னியின் துயரம்

வல்லூறுகளின் வானில் வானம் பாடியின் ஓலம்
கானம் பாடிய கோகிலத்தின் வாயில் முகாரியின்
ஓயாத ஆலாபனம், விடுதலையோ வெறுங்கனவு,
வேடன் வலைப்பட்ட புள்ளிமானாய் வாழ்வு

அங்கை மலரும், பங்கய முகமும், கண் வண்டும், கொங்கை முகிழும்,
கார் குழலும் கொண்ட மங்கையோ முகையாகித் தன்னை மூடி மறைக்க
நெஞ்சமெல்லாம் தணலாகி, நினைவெல்லாம் கங்கையாகிச் சோகம்
பெருக்கெடுக்க, இதழ்கள் உரித்து, அசுரர் யாத்த வேள்வி வல்லாங்கு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-16-04-2023

கண்டு மலர்ந்த இன்பக் காதல்



மங்கை விழிகளோ கயல்களைச் சொல்ல
நங்கை வதனமோ பங்கயத்தை ஒப்ப
கன்னி சாயலோ தோகையைச் சொல்ல
கண்ட விழிகள் கவிதை சொல்லியதே



கார்குழலோ கள்ளிருக்கும் மலர்வனம்
பார், பார் எனச் சொல்லும் மனதில் காதலின்
நறுமணம், ஊர் பேர் தெரியாத மங்கை-பூரித்த
அழகில் திருமகளுக்குத் தங்கை

கொங்கை முகிழும், கொடி இடையும்
அங்கை தளிரும், அடி மலரும், திங்கள் முகமும்
செவ்வாய் இதழ்களும் நங்கை அழகிற்கு அழகூட்ட,
காதல் நிலாக கண்டு பூத்த அல்லியாய் என் மனது

வேலாய் நிற்கும் புருவம், காமன் கணையாய்
காளையர் மனதை வருத்தும் கன்னிப் பருவம்,
செவ்வாயில் வற்றாத முத்தச் சுவை, நாற்குணமும்
நாற்படையாக, அணங்கோ அழகின் பேரவை

இதழ் மலரப் பூத்த குறுநகையில் முத்துச் சரம்,
பிறை நுதல் சுட்டியோ வணணச்சரம்
கண்டு காதலான மனம் மீட்கும் நாதஸ்வரம்
எண்ணிட மனதிலே காதலின் சுரம்



கார் கண்ட மயிலாய் மனம் ஆட, கானம் கேட்ட
குயிலாய் மனம் பாட, அண்ணலும் நோக்க
அவளும் நோக்க, கண் வழி கலந்த இதயங்கள்
காதலாகிச் சங்கமிக்க நாளும் புது உதயங்கள்

நாணச் செம்மை சூடிய ஆனிப் பொன்மேனியில்
அழகின் திருக்கோலங்கள், வண்ணப் பூவான
பூவையை மதுகாரியாய் மனம் மொய்க, காளை
மனதிலே காதலின் அமுத கானங்கள்

கண்கள் தழுவிக் காதல் சொல்ல, பூமேனி
வாசம் சுவாசத்தை அள்ள, இதழ்கள் கவ்வி
இன்பம் பெருக, இருமனம் ஒரு மனமாக
இன்பத் திருமணம், வாழ்வோ வற்றாத தேன் வனம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே

Pax Ravichandra-5-5-2024

நெஞ்சமெல்லாம் நீயாக

நெஞ்சமெல்லாம் நீயாக-என்
நினைவெல்லாம் உனதாக-துஞ்சிட
வரும் வண்ணக்கனவும் நீயாக
என்தன் காதல் அஞ்சுகம் நீயடி



மலரும், மணமுமாய் ஒன்றான உள்ளம்
ஆர்ப்பரிக்கும் சங்கமத்தில் கடலும் நதியுமாய்
கலந்திடும் காதல் வெள்ளம்-அன்பினால்
இன்புற்றுப் பாடும் காதல் கோகிலம்



பொன் வண்ணம்தான் மேனி நிறத்தைச் சொல்ல
அன்னம்தான் அழகு நடையைச் சொல்ல
கன்னம்தான் கிண்ணம் பழங்களைச் சொல்ல
எண்ணம்தான் காதலாகி கானம் பாடியதே

மொழி சொல்லாத காதலை கயல் விழிகள் சொல்லும்,
பூ சொல்லாத வண்ணத்தை பூவை நாணம் சொல்லும்
தேன் சொல்லாத சுவையை செவ்விதழ்கள் சொல்லும்
மலர் சொல்லாத நறுமணத்தை மங்கை மேனி சொல்லும்

பைங்கொடி மேனியில் பலவண்ணப் பூக்கள்
பங்கய முகம், பூவிழி குவளை, முல்லை முறுவல்,
குமுதவாய், செண்பக மூக்கு
ஐம்பூ விளையும் அமிர்தநிலமாய் நங்கை

இதயங்கள் இடம்மாறிட, கனவும், நினைவும்
வண்ணங்களாகிட, காதலாகித் துடிப்பதும்
இதயம்தான், காதலாகிக் களிப்பதும் இதயம்தான்

கொள்ளை அழகடி நீ-என்னைக் கனவிலும் கொல்லும் அழகடி நீ,
செப்பும் மொழிகளில் தேவகானம்-பிரம்மன் செதுக்கிய மேனியில் மோகனம்,
குமுதச் செவ்வாயில் அமுதச் சுவை, குவளை விழிகளில் குறும் புன்னகை
முல்லைச் சிரிப்பில் முத்துச் சரம்-அழகைக் கண்டு என் நெஞ்சில் காதல் சுரம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-9-4-2023

ஓ புத்த பெருமானே

ஓ புத்த பெருமானே! கங்கைகளும், காட்டாறுகளும்
பொங்கிப் பாயும் ஈழத்தே இன்று கண்ணீர்க் கங்கைகளும்,
குருதியாறுகளும் பெருக்கெடுத்ததென்ன? அன்னையரும்,
விதவைகளும் கண்ணீர்த் தவம் புரிவதுமென்ன?





முப்பதாண்டுகால தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில்
பலியான உயிர்கள்தான் எத்தனை? மூவினமும்
பிளவுபட, இனவாதம் மதவாதம், தலைவிரித்தாட
எம் தேசம் செல்லும் பாதைதான் என்ன?



படுகொலை செய்யப்பட்ட ஊடகத்துறையினரின்
குடும்பங்களுக்கு நீதி மறுக்கப்பட்டதென்ன?
காணமல் ஆக்கப்பட்ட பல்லாயிரம் மக்களின் கதி
இன்றும் வெறும் கேள்விக் குறியானதென்ன?



சஹரான் குண்டு வெடிப்பில் கொல்லாப்பட்டவருக்கு
நீதி மறுக்கப்பட்டதென்ன? காயமுற்று, அங்கமிழந்து
ஊனமானவர் வாழ்வு நாதியற்ற அனாதையானதென்ன?
இன்றும் குற்றவாளிகள் யார் புரியாத புதிரானதென்ன?



நாட்டைச் சூறையாடிய அரசியல்வாதிகளுக்கு இன்றும்
பௌத்த பீடாதிபதிகளின் ஆசி- காணொளிகளில் காட்சி,
வேசித்தன மாட்சி, ஏழைகளின் முதுகு கூனிட
விண்ணைத் தொட்ட விலை வாசி



இனவாத, மதவாத இழிந்த அரசியலில் தமிழர் ஒற்றுமை,
எட்டாத வான் நிலவு, மேடைகளிலும், காணொளிகளிலும்
தலைவர்களின் வேண்டாத கர்சனைகள், விபச்சார அரசியலில்
காட்டிக் கொடுப்பும், கட்சித் தாவலுமாய் எட்டப்பர்களின் மாட்சி



தோட்டத் தொழிலாளிலாளர் நாட் சம்பளம்
அரசியல் சூதாட்டம், ஏழைகளின் வாழ்வோ
நாளும் போராட்டம், 1700 ரூபாய் என்பது கனவு
மேடையில் ஜனாதிபதியின் ஆராவாரச் சொற்பொழிவு



போதி மரநிழலில் பெருமான் புத்தரின் கற்சிலைகள்
சிலுவை மரத்தில் இயேசுபெருமானின் அவல நிலைகள்
கண்ணீர்த் தவத்தில் தாய் மரியாள்கள், ஏழைகளின் வயிற்றில்
பசித் தீ, பல்கலைக் கழக மாணவர் மனங்களில் புரட்சி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-06-05-2024

பார்வை ஒன்றே போதுமே

அழகைக் கண்ட விழிகளில் விழாக்கோலம்
செவிகள் உண்ட மொழிகளில் இசைக்கோலம்
இதயங்களில் காதலின் கொட்டு மேளம்
நினைவிலே கனாக் காணும் காலம்



இதயம் எழுதிடும் கவிதையில் அவள் வசந்தம்
எண்ணங்களின் ஊர்வலத்தில் வண்ணக்கோலம்
மனதிலே காதல் வானம் பாடியின் கானம்
இரு மனங்களிலும் தோகையின் ஆனந்த நடனம்



நினைந்து மகிழ நெஞ்சிலே கம்பனின் காவியம்
கண்டு மகிழ் விழிகளுக்கு சித்தன்ன ஓவியம்
கன்னி மயிலோ காதலின் திரவியம்
என்தன் மனதில் அவளின் ஜீவிதம்

வேல் விழிகளோ காமனின் கணை, நெஞ்சில்
தைத்திட பேசும் மொழிகளில் காதலின் கீர்த்தனை
பொன் மேனியிலோ அழகின் ஒப்பனை
கண் பார்த்து நெஞ்செழுத காதலின் ஆலாபனை

புன்னகை இருக்கப் பொன்னகை எதற்கு? பொன்மேனி
எங்கும் பூவாசம் கமழ, பூசிடப் பரிமளம் எதற்கு?
முல்லைப் பற்கள் ஒளிர, முத்துச் சரம் எதற்கு
புத்தம் புது மலராய் பூவை இருக்க, பூக்கள் எதற்கு?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra